**பனை அபிவிருத்திச் சபை – 2017**
-----------------------------------------------------

பனை அபிவிருத்தி சபையின் (''சபை'') 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 44 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்து பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2018 ஓகஸ்ட் 13 இல் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**
---------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**
-------------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வைத் திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் இந்நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ் அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிற்கேற்ப எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான (எஸ்எல்பிஎஸ்ஏஎஸ்) இணக்கம்**

எஸ்எல்பிஎஸ்ஏஎஸ் 7 - ஆதனம், பொறி மற்றும் உபகரணம்: முன்னைய ஆண்டுகளின் போது ரூபா 22,395,067 கிரயத்தில் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட ஆறு சொத்துக்கள் அவற்றின் பயனுறு பாவனைக் காலத்தை மீளாய்வு செய்யாமல் சபையால் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்ததுடன் அதனடிப்படையில் கணக்கீடும் செய்யப்பட்டிருந்தன.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

09 மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறப்பட வேண்டிய ரூபா 4,894,325 ஆன பெறுவனவுகள் கடந்த 03 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தன. எவ்வாறாயினும், இவ் ஏற்பாடுகளுக்கு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.3 செலுத்த வேண்டிய கணக்குகள்**

செலுத்த வேண்டிய கூட்டுமொத்தம் ரூபா 248,885 தெகையான மீதிகள் மூன்று வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் காணப்பட்டதுடன் முறையான விசாரணையை மேற்கொண்ட பின்னர் கணக்குகளில் சீராக்கம் செய்யவோ அல்லது தீர்ப்பனவு செய்யவோ எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணங்கள்** | |
| (i) நிதிப்பிரமாணம்; 110 | வேண்டப்பட்டவாறு இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பற்றிய ஒரு பதிவேடு சபையால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 135 | சபையின் தலைவரால் நிதி அதிகாரம் முறையாக கையளிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) நிதிப்பிரமாணம் 445, 715(i) மற்றும் 751 | (i) பெறுகைகள், வழங்கல்கள், மீதி கீழ் கொண்டு செல்லல் என்பவற்றை தெளிவாக தெரியும் வகையில் உரிய நேரத்தில் இருப்பு பதிவேடுகள் பேணப்பட்டிருக்காததுடன் சபைக்குச் சொந்தமான மாவட்ட அலுவலகங்கள் மற்றும் விற்பனை நிலையங்களால் முறையான களஞ்சிய நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.<br><br>(ii) முன்னைய ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பற்றாக்குறைகள், மிகைகள் மற்றும் ஏனைய அவதானிப்புக்கள் மீதான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| **(ஆ) 2003 யூன் 02 இன் பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை** | |
| 4.2.5 ஆம் பந்தி | சபையானது அதன் தொழிற்படு மூலதனத்தின் ஆக்கபூர்வமான முகாமைத்துவத்திற்கான நிறுவக முறைமைகளைக் கொண்டிருக்காததுடன் பின்வரும் கூற்றுக்கள் சபைக் கூட்டங்களில் மாதாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவுமில்லை.<br><br>(i) கடன்பட்டோரினதும் கடன் கொடுத்தோரினதும் கால பகுப்பாய்வு<br><br>(ii) இருப்புக்களின் வயதுப் பகுப்பாய்வு<br><br>(iii) பழைய, மெதுவாக அசையும் மற்றும் வழக்கிழந்த இருப்புக்கள் மற்றும் ஏனைய விடயங்களை இனங்காணும் கூற்று. |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாடு அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 128,597,258 பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் ரூபா 131,952,115 பற்றாக்குறையொன்றினை விளைவித்திருந்தமையால் சபையின் நிதி விளைவுகளில் ரூபா 3,354,857 ஆன மேலுமொரு வீழ்ச்சியினை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டிற்கான வருமானத்திற்கெதிராக ரூபா 8,739,881 ஆன ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மற்றும் பயிற்சி செலவினம் என்பவற்றினை தாக்கீடு செய்தமையே இந்த பின்னடைவிற்கான பிரதான காரணமாக கொள்ளப்பட்டுள்ளது.

மீளாய்வாண்டின் போது சபையின் செயற்பாடுகள் ரூபா 131.95 மில்லியன் பற்றாக்குறையை விளைவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது நாட்டிற்கான சபையின் பங்களிப்பு கணக்குகளிற்கு கொண்டுவரப்பட்ட பின்னரான ஆளுக்குரிய வேதனாதிகள், அரசுக்கு செலுத்திய வரிகள், வீதவரிகள் மற்றும் தேய்மானங்கள் உள்ளடங்களாக ரூபா 208.91 மில்லியனாக இருந்தது. ஆகையால் மீளாய்வாண்டின் இறுதியில் பெறுமதி சேர்க்கை ரூபா 76.96 மில்லியனாக இருந்தது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான சபையின் மொத்த செயற்பாட்டுச் செலவினம் ரூபா 181,303,559 ஆக இருந்த போதிலும் அதில் ஆளணி வேதனங்களிற்காக ரூபா 123,078,150 ஏற்பட்டிருந்ததுடன் மொத்த செலவினத்தினத்தின் 67 சதவீதத்தை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ஆ) கற்பக விற்பனை நிலையங்களுக்கான செலவில் ஊழியர்களுக்கான கொடுப்பனவு உள்ளடங்காத போதிலும் சபையினது மொத்த இலாப எல்லையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் 19 வீதத்திலிருந்து 27 வீதமாக அதிகரித்துள்ளது.

(இ) மீளாய்வாண்டு காலத்தில் கற்பக விற்பனை நிலையங்களுனுடைய மொத்த இலாபமானது சபையின் ஆளணி வேதனங்களிற்கான செலவில் 09 சதவீதத்தை மட்டும் ஈடுசெய்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையானது வெல்லம், வஞ்சகம், இனிப்புக்கள், கற்கண்டு, போத்தல்கள், வினிகர், போத்தல் கூழ், பனாட்டு, பாணிப் பனாட்டு, ஜாம், கோடியல், பரிமாறத் தயாரான குடிபானம், மருத்துவ அடிப்படையிலான உற்பத்திப்பொருட்கள், பனங்கிழங்கு (புதியது), உலர்ந்த கிழங்கு, உலர்ந்த கிழங்கு மா, வேக வைத்த கிழங்கு மா, பாம் போசா (palm posha), பிஸ்கட்டுக்கள், குதப்பிகள் பாரம்பரிய கைவினைப் பொருட்கள், நெசவு போன்ற பிரம்புக் கூடைகள், பிரம்புக் கதிரைகள், மரமுந்திரிகை பொதி செய்வதற்கான பெட்டிகள், தேநீர் மற்றும் மசாலாக்கள், தொப்பிகள், பாய்கள், விளக்குமாறுகள், பல் குத்திகள், வளைந்த குச்சிகள்

போன்ற ஈக்குப் பொருட்கள், பூச்சாடிகள், அலங்காரப் பொருட்கள், வோல் ஹங்கர்கள் (wall hangers), தோட்டக்கலை தாவரங்களிற்கான வளர்ச்சி ஊடகமாக நார் தூசி, மண் அமிலத்தன்மை கட்டுப்பாடு, கடின இழை கனரக தூரிகைகள், நடுத்தர இழை சுத்தமாக்கும் மற்றும் வீட்டுத் தூரிகைகள் மென்மையான இழை, நூல், நார் கைவினைப் பொருட்கள், நிர்மாண நோக்கங்கள், தளபாடம் தயாரித்தல், சிப் பலகைகள் (chip boards) மற்றும் விறகு போன்ற பனை உற்பத்திப் பொருட்களின் பல்வேறு வகைகள் தொடர்பாக அதன் உற்பத்திப்பொருள் மட்டங்கள், மற்றும் சந்தைப்படுத்தலை அதிகரிப்பதனூடாக தேசிய பொருளாதார வளர்ச்சி, ஆரோக்கியமான சமூகம் மற்றும் திண்ம கழிவு பிரச்சினையை குறைத்தல் என்பவற்றிற்கான பங்களிப்பு போன்ற அதன் பிரதான நோக்கங்களை அடைவதற்கு போதுமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிட்ட இலக்குகள் வெல்ல உற்பத்தி, கூழ் உற்பத்தி மற்றும் நார் உற்பத்தி ஆகியவற்றை அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் சார்புடைய குடும்பங்களின் வாழ்வாதார அபிவிருத்தியினுடைய நோக்கங்களுக்கான பொருட்கள் மற்றும் பனைசார் கைவினைப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 செயற்பாட்டு திறமையீனங்கள்

### 4.2.1 திக்கம் வடிசாலை செயற்திட்டத்தின் செயற்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வடமராட்சி பனை அபிவிருத்தி கூட்டுறவுச் சங்க கொத்தணி மற்றும் சபை என்பவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட குத்தகை உடன்படிக்கையின் 01 மற்றும் 02 ஆம் பிரிவுகளின் பிரகாரம் 2008 மே இலிருந்து மாதாந்த உரிமைத்தொகை மற்றும் குத்தகை வாடகை ரூபா 1,609,453 இனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் பின்னர் செயற்பாட்டு நிலையில் இருக்காத திக்கம் வடிசாலை புனரமைப்பு செய்வதற்காக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் 2016 ஆம் ஆண்டு மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் முறையே ரூபா 112.5 மில்லியன் மற்றும் ரூபா 150 மில்லியன் ஏற்பாடு செய்யப்பட்டது. எனினும் 2018 செப்டம்பர் 26 வரைக்கும் வடிசாலையினடைய செயற்பாடு ஆரம்பிப்பதற்கும் மற்றும் ஏற்பாடு செய்யப்பட்டவற்றை பயன்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2.2 நட்டத்தில் இயங்கும் மாதிரிப் பண்ணைகள்

ஆறு மாதிரிப் பண்ணைகள் தொடர்ச்சியாக கடந்த 05 ஆண்டுகளாக நட்டத்தில் இயங்குகின்றதுடன் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டு காலப்பகுதியின் போது தொடர்ச்சியான நட்டங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| மாதிரிப் பண்ணையின் பெயர் | ஆண்டுகளிற்கான தேறிய நட்டம் | | | | |
|---|---|---|---|---|---|
| | **2017** | **2016** | **2015** | **2014** | **2013** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| குடத்தனை | 259,108 | 276,556 | 688,821 | 545,045 | 462,273 |
| மாமுனை | 411,543 | 452,418 | 608,282 | 694,221 | 571,755 |
| நெடுந்தீவு | 2,168 | 56,828 | 60,000 | 61,620 | 380,044 |
| புளியங்குளம் | 830,097 | 2,283,204 | 2,383,310 | 1,771,618 | 700,423 |
| **தேறிய நட்டம்** | **1,502,916** | **3,069,006** | **3,740,413** | **3,072,504** | **2,114,495** |

மேலும் 137 ஏக்கர்கள் மொத்தப் பரப்புளவுடனான மாமுனை, அறிவியல் நகர், ஊற்றுப்புலம் மற்றும் முளங்காவில் ஆகிய நான்கு மாதிரிப் பண்ணைகள் 2010 இலிருந்து பண்னை நடவடிகக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2.3 பனை ஆராய்சி நிறுவகத்தினுடைய செயற்பாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட ஆராய்சி செயற்பாடுகளுக்காக ரூபா 74 மில்லியன் செலவுசெய்யப்பட்ட போதும் இவ் ஆராய்சி செயற்பாடுகள் சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கோ அல்லது பனைசார் சமுதாயத்தினருக்கோ நன்மையளிக்கவில்லை.

(ஆ) ஆராய்சி திட்டத்தினை அனுமதிப்பற்கு விஞ்ஞான ரீதியான மதிப்பீட்டு நடைமுறைகளை காணப்பட்டிருக்கவில்லை.

(இ) நாட்டினுடைய பொலித்தீன் பாவனையை குறைக்கும் பொருட்டு மாற்று மற்றும் கவர்ச்சிகரமான கைவினைப் பொருட்களை அறிமுகப்படுத்தும் ஆராய்ச்சியில் அவர்களது கவனம் செலுத்தப்படவில்லை.

**4.2.4 கற்பக விற்பனை நிலைய செயற்பாடு**

02 கற்பக விற்பனை நிலையங்கங்கள் சரியான கண்காணிப்பு முறைமை மற்றும் தந்திரோபாய சந்தைப்படுத்தல் திட்டமின்றி செயற்பட்டதனால் மீளாய்வாண்டில் ரூபா 119,880 நட்டத்தில் இயங்கியிருந்தது.

## 4.3 ஓப்பந்த முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு காலப்பகுதியில் கூட்டுமொத்தம் ரூபா 4,122,497 உற்பத்தி நிலைய கட்டுமானப்பணிக்காக செலவு செய்யப்பட்டிருந்தது மேலும் இது கொடுக்கப்பட்டு 2017 பெப்ரவரி 28 கட்டி முடிக்கப்பட வேண்டும் எனினும் உற்பத்தி நிலையம் 337 நாட்கள் காலதாமதத்துடன் 2018 பெப்ரவரி 23 இல் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. மேலும் 90 சதவீதங்கள் ஆன கட்டுமான பணிகள் மாத்திரம் முடிவுறுத்தப்பட்டது அவதானிக்கப்பட்டுள்ளதுடன் ஒப்பந்தகாரர் மீது தாமத கட்டணமும் விதிக்கப்படவில்லை.

(ஆ) கைதடியில் இரண்டு மாடி பனை பாடசாலை கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சினால் ரூபா 25 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டில் அத்திவாரக் கல் இட்ட பின்னரான நிர்மாண நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினுடைய உள்ளக கணக்காய்வாளர் சபைக்கு 2011 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நிரந்தர அலுவலர் என்ற அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தார். மீளாய்வாண்டில் மாதாந்த சம்பளமாக ரூபா 55,671 அவருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலும் 2017 ஆம் ஆண்டு ஏனைய படிகளாக கூட்டுமொத்தமாக ரூபா 128,448 அவருக்கு செலுத்தப்பட்டது. அதற்கு மேலும் அவர் சம்பந்தப்பட்ட அதிகார தரப்பினரிடமிருந்து தேவையான அனுமதி பெறல் மற்றும் சபையினுடைய ஒப்பதலும் இன்றி ஊவா வெல்லச பல்கலைக்கழகத்தில் சிரேஸ்ட உதவி உள்ளக கணக்காய்வாளராக வேலை செய்துகொண்டிருந்தார்.

கணக்காய்வுக்கு கிடைக்க கூடியதாகவிருந்த தகவல்களிற்கு இணங்க சபையினால் செலுத்தப்படும் சம்பளங்கள் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக 2018 ஒகஸ்ட் 01 இல் இருந்து 2018 யூலை 31 வரையான காலப்பகுதியில் பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்ட சேவைகள் சார்பாக ஊவா வெல்லச பல்கலைக்கழகத்திலிருந்து ரூபா 600,000 சம்பளத்தினை பெற்றிருந்தார். மேலும் அவர் சபைக்கு மோசடியான ஆவணங்களை சமர்ப்பித்ததால் பிரயாணப்படியாக ரூபா 72,000 பெற்றிருந்தார்.

(ஆ) ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தினை கருத்தில் கொள்ளாது சபையினுடைய 08 முகாமையாளர்களுக்கு சம்பள ஆண்டேற்றம் மொத்தமாக ரூபா 4,280,600 செலுத்தப்பட்டிருந்தது. மேலும் மேல் குறிப்பிட்ட அலுவலர்கள் சார்பாக ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பாக சபையினால் ரூபா 627,577 செலுத்தப்பட்டிருந்தது.

## 4.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெற்றிடங்களை நிரந்தரமாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 02 நபர்களிடமிருந்து தொடர்ச்சியாக அமைய அடிப்படையில் சேவை பெறப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் ஆரம்ப நிலையிலுள்ள 10 மிகைப் பதவியினருக்காக அங்கீகாரத்தைப் பெறுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினுடைய பல்வேறு பதவிகளில் உள்ள 212 அலுவலர்களுக்கான வினைத்திறன் தடை தாண்டல் பரீட்சை நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக அவர்களின் சேவைகள் 2018 செப்டம்பர் 26 வரை உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், சம்பந்தப்பட்ட அலுவலர்களின் தகமை சான்றிதழ்களை கடந்த 12 வருடங்களுக்கு மேலாக தொடர்புடைய நிறுவனங்களிடமிருந்து உறுதிப்படுத்தி பெறப்பட்டிருக்கவில்லை.

(இ) 2012 இல் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டம் முகாமைத்தவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் மேற்படித் திட்டத்தின் பிரகாரம் ஏற்கனவேயுள்ள பதவியணி மற்றும் சம்பளக் கொடுப்பனவை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.6 வாகனங்களின் பயன்பாடு**

05 இரு சக்கர உழவு இயந்திரம், 01 மோட்டார் கார்- ஜீப், 01 மோட்டார் சைக்கிள், 01 உழவு இயந்திரம் மற்றும் 01 பவுசர் ஆகிய வாகனங்களை திருத்தவும் சபையினுடைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.7 நிலைபேறான அபிவிருத்தி**

இலக்குகள் நோக்கங்களை அடைந்த கொள்வதற்கான மைல்கல் உடனான சபையின் செயற்பாடுகளுடன் தொடர்புபட்டவகையில் 2030 ஆண்டில் அடைந்து கொள்வதற்கான மேற்கூறப்பட்ட தேசிய நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான விழிப்புணர்வின்மையால் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் இலக்குகளையும் இனம் கண்டு கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கபடவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சபையினுடைய உள்ளக கணக்காய்வு திட்டம் வருட ஆரம்பத்தில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) காலண்டு கணக்காய்வு அறிக்கை மற்றும் கணக்காய்வு ஐயவினா பிரதிகள் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ஒவ்வொரு வருடமும் ஆராய்சி செயற்பாடுகளுக்காக பல மில்லியன் செலவு செய்யப்பட்ட போதும் உள்ளக கணக்காய்வு அலகின் கணக்காய்வு விடய பரப்பில் பனை ஆராய்சி நிலைய செயற்பாடுகள் மற்றும் கட்டுமான வேலைகள் உள்ளடக்கப்படவில்லை.

**5.2 நிதிக்கூற்றுக்களை தயாரித்தலும் சமர்ப்பித்தலும்**

2007 ஒக்தோபர் 02 இன் பிஈடி/45 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் சபையினால் பொறுப்பேற்கும் வாசக கூற்றுக்களை உள்ளடக்காமல் சபையினுடைய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம்

2005 யூலை 01 திகதிய பிஈடி/31 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் ஆகக் குறைந்தது நான்கு கணக்காய்வு முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும் மீளாய்வாண்டில் 03 முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டது.

## 5.4 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

2006 இல் பெறுகை வழிகாட்டியின் 4.2 ஆம் வழிகாட்டி விதிமுறையின் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.5 பாதீட்டு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக பாதிடப்பட்டவற்றிற்கும் உள்ளபடியான வருமானம் செலவினத்திற்கும் இடையில் 06 வீதத்திலிருந்து 129 வீதமான குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது, பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்தவக் கட்டுப்பாட்டு கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்காமையை குறிக்கின்றது

(ஆ) பாதீடப்பட்ட ஏற்பாடுகள் இல்லாமல் வாகனங்கள், தளபாடமும் உபகரணமும், கட்டிடங்கள், இயந்திர உபகரணங்கள், ஆய்வுகூட பரீட்சிப்பு உபகரணம், கணனி மற்றும் அச்சு இயந்திரம் என்பவற்றின் பெறுகைக்கான கூட்டுமொத்தமான செலவினமாக ரூபா 65,873,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5.6 ஆண்டறிக்கைகள் சமர்ப்பித்தல்

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளிற்கான சபையின் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(அ) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் சபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. நிலையான சொத்துக்கள் மீதான கட்டுப்பாடுகள் மற்றும் பனை ஆராய்சி நிலையத்தினுடைய ஆராய்சி செயற்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.